# பெப்ரவரி - 17- வெள்ளி

## தூய கன்னி மரியாவின் சபையினர்

## ஆண்டவரின் எண்ணங்களோ என்றென்றும் நிலைத்திருக்கும்: திபா. 33:11

---------------------------------------------------------------------

### முதல் வாசகம்: தொடக்க நூல்11:1 – 9

உலகத்தில் ஒரே மொழியும் ஒரே விதமான பேச்சும் வழங்கி வந்தன. மக்கள் கீழ்த்திசையிலிருந்து புறப்பட்ட போது, சென்னார் நாட்டில் சமவெளியைக் கண்டு அங்கே குடியேறினர். அப்பொழுது அவர்கள் ஒருவரோடொருவர்: வாருங்கள், செங்கல் அறுத்துச் சூளையிலிட்டுச் சுடுவோம் என்று பேசிக்கொண்டு, கருங்கல்லுக்குப் பதிலாகச் செங்கற்களையும், சாந்துக்குப் பதிலாகத் தாரையும் பயன் படுத்தினர். மேலும் அவர்கள்: வாருங்கள், நாம் நாடுகள் தோறும் சிதறிப் போகு முன்னே ஒரு நகரையும், விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோமாக என்று சொன்னார்கள்.ஆனால், ஆதாமின் புதல்வர் கட்டி வந்த நகரையும் கோபுரத்தையும் பார்க்க ஆண்டவர் இறங்கி வந்தார்.அப்பொழுது அவர்: இதோ, மக்கள் ஒரே இனமாயிருந்து ஒரே மொழி பேசி வருகிறதனாலன்றோ இதைச் செய்யத் தொடங்கினார்கள்! தாங்கள் செய்ய நினைத்ததை அவர்கள் விடாமல் எப்படியும் செய்து முடிப்பார்கள்.சரி நாம் இறங்கிப் போய், அவர்களுள் ஒருவர் பேசுவதை மற்றவர் அறியா வண்ணம் அவர்களது மொழியைக் குழப்பி விடுவோம் என்றார்.அவ்வாறு ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து உலகமெங்கும் சிதறிப் போகச் செய்தமையால், அவர்கள் அந்நகரைக் கட்டுவதை விட்டு விட்டனர்.பூமியெங்கும் வழங்கும் மொழிக் குழப்பம் அவ்விடத்தில் பிறந்தமையால் அதன் பெயர் பாபேல் எனப்பட்டது. ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து நாடுகள் தோறும் சிதறிப் போகச் செய்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

### நற்செய்தி: மாற்கு 8:34- 9: 1

அக்காலத்தில் ஆண்டவர் இயேசு தம் சீடரையும் கூட்டத்தையும் அழைத்து, ”என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும். ஏனெனில், தன் உயிரை காத்துக்கொள்ள விரும்பகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தன் உயிரை இழப்பவனோ அதைக் காத்துக்கொள்வான். ஒருவன் தன் ஆன்மாவிற்குக் கேடு விளைவித்து, உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்?விபசாரமும் பாவமும் உள்ள இத்தலைமுறையில் எண்னைப்பற்றியும், என் வார்த்தைகளைப் பற்றியும் வெட்கப்படுகிறவன் எவனோ, அவனைப்பற்றி மனுமகன் தம் தந்தையின் மாட்சிமையில் பரிசுத்த வானதூதரோடு வரும்போது வெட்கப்படுவார்” என்றார். மேலும் அவர்களை நோக்கி, ”உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசு வல்லமையோடு வந்திருப்பதைக் காணும்வரை இங்கிருப் பவர்களுள் சிலர் சாவுக்குள்ளாக மாட்டார்கள்” என்றார்.

**தியானம்:** இன்றைய வாசகத்தில் “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு பின்பற்றட்டும்” என்று இயேசு தம் சீடர்களுக்கு கூறுவதைப் பார்கின்றோம். இயேசு வாழ்ந்த காலத்தில் பெரிதான குற்றங்கள் செய்த குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனை சிலுவைச் சாவு ஆகும். அவர்களின் தோள் மேல் சிலுவை ஏற்றப்பட்டு தெருவழியே நடத்திச் செல்லப்பட்டனர். போகும் வழியில் சாட்டையால் அடிக்கப்பட்டார்கள். சிலுவைச் சாவு என்பது எத்துணை கொடூரமானது என்பது இயேவுக்கு தெரிந்திருக்கும். தன்னலம் துறந்து பிறர் நலம் கருதி வாழும் மக்கள் எம் மத்தியில் குறைந்து கொண்டு போகின்றது எங்கு பார்த்தாலும் அங்கு எல்லாம் சுயநலம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். நிலையில்லாத இந்த உலக வாழ்வைக குறித்து நாம் கவலை கொள்ளாமல் நிலைவாழ்வு தரும் இறைவனை நாம் தேடவேண்டும். இயேசுவின் சிலுவைச் சாவு நாம் மீட்பு பெறுவதற்கு வழியாயிற்று இயேசுவை பின்பற்றுவோரும் சிலுவைச் சாவை சந்திக்க தயாராக இருக்க வேண்டும் என்பது கடினமான போதனைதான். இயேசுவின் பின் செல்ல விரும்புவோர் அவரைப் போல சிலுவையைச் சுமப்பவர்களாக இருக்க வேண்டும். இயேசுவை நம்புவோர் அவர் வழியை பின்பற்ற விரும்புவோர் ஒவ்வொரு நாளும் தம்மையே ஒறுத்து, தன்னலம் துறந்து வாழவேண்டும் என்பதனையே இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு எடுத்துரைக்கின்றது ஆமென்.